உ



காரைநகர்

# மணிவாசகர் சபை

**ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும்**
**காரைநகர் திண்ணபுரச் சிவன்கோவிலில்**
**மஹா சிவராத்திரி வழிபாடு**

**சிவநேயச் செல்வர்களே!**

நிகழும் துன்முகி வருடம் மாசித் திங்கள் 12ஆம் நாள் 24.02.2017 வெள்ளிக்கிழமை சிவராத்திரி தினமாகும். இத்தினம் சிவபெருமானுக்குரிய விரத தினமாகும். சிவ விரதங்களில் மிக உன்னதமான விரதமாகும். சைவ மக்கள் அனைவரும் அனுட்டிக்க வேண்டிய விரதமாகும்.

இந்நாளில் ஐம்பொறிகள் வழி செல்லாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் எம்பெருமானை மெய்யன்போடு வழிபட வேண்டும். சிவ வழிபாட்டை சிவ ஆலயங்களில் வழிபடுவது சாலச் சிறந்ததாகும்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு 24.02.2017 வெள்ளிக்கிழமை அதிகாலையிலிருந்து அடுத்தநாள் அதிகாலை வரை விசேட பூசைகள், விசேட அபிஷேக ஆராதனைகளும் "ஓம் நமசிவாய சிவாய நம ஓம்" என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் இருபத்து நான்கு மணிநேரம் ஓதும் அகண்ட நாம வழிபாடும், அஷ்டோத்திர நாம அர்ச்சனை (108 நாமங்கள்) ஆகியனவும் நாள் முழுவதும் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

சிவராத்திரி மறுநாள் அதிகாலை எம்பெருமான் துர்வாக சாகரம் எனப்படும் புண்ணிய சமுத்திர தீர்த்த நிகழ்வு இடம்பெறும். அடியார்களும் சமுத்திரத் தீர்த்தமாடி மாணிக்கவாசகர் அன்னதான சபையில் பாறணையை முடிப்பதற்கு திருவமுது வழங்கலும் இடம்பெறும்.

சிவனடியார்கள் திரண்டு வருகைதந்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி எம்பெருமானின் திருவருளைப் பெற்று உய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்.

ஆதீன கர்த்தாக்கள்
திரு. ஆ. அம்பலவிமுருகன்
திரு. மு. சுந்தரலிங்கம்

காரைநகர் மணிவாசகர் சபை
18.02.2017